**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.163/2022**

**தேதி : 05.03.2026**

**(பி.வா.சா.1) – திரு. மாரிமுத்து**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)**

1. வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பண வசூலுக்காக தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தச் சொல்லி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பை அனுப்பினார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்ன எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் வாதி நடத்தி வந்த நிதி நிறுவனத்தில் தான் பணம் வாங்கினேன் என்றும், அதனைத் திருப்பிச் செலுத்திவிட்டேன் என்றும், தனிப்பட்ட முறையில் பணம் வாங்கவில்லை என்றும் எதிர்வாதம் செய்கிறேன்.

2. மேற்படி விபரங்கள் தவிர வேறு என்ன விபரங்கள் என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் என்னிடம் பூர்த்தி செய்யப்படாத பத்திரம் மற்றும் கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் வாங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளேன். 2020 ஆம் ஆண்டு பணம் செலுத்தியதற்கான ரசீதும், பத்திரங்களை என்னிடம் திருப்பிக் கொடுத்த விபரத்தை தெரிவித்துள்ளேன். அதிலிருந்து சில பூர்த்தி செய்யப்படாத பத்திரங்களை எடுத்து அவரிடம் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கியதாக தெரிவித்திருந்ததை மறுத்து எதிர்வாதம் செய்துள்ளேன். கடனுறுதிச்சீட்டின் சாட்சிகளை எனக்கு யார் என்று தெரியாது என்று எதிர்வாதம் செய்துள்ளேன்.

3. வாதி நடத்தி வந்த நிதிநிறுவனத்தில் கணக்கு முடிக்கப்பட்ட பிறகு என்னிடம் ஒப்படைக்கப்பட்ட ஆவணங்களைத் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி மற்றும் சில நபர்கள் சேர்ந்து தான் நிதிநிறுவனம் நடத்தி வந்தார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. வாதி நடத்தி வந்த நிறுவனத்தில் வாகனங்களுக்கு மட்டும் தான் கடன் கொடுத்து வந்தார்கள் என்றும்,

நானும் எனது வாகனத்தை வைத்து தான் கடன் வாங்கினேன் என்றும் சொன்னால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 2020 ஆம் ஆண்டிலேயே கணக்கு வழக்குகளை முடித்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வாதியிடம் கடன் பெறப்பட்டது 2021 ஆம் ஆண்டு என்பது தான் வாதியின் வழக்கு என்றால் சரிதான். நிதிநிறுவனத்தில் நான் கடன் வாங்கும்போது எத்தனை கடனுறுதிச்சீட்டு, எத்தனை காசோலைகளில் கையொப்பம் வாங்கினார்கள் எனக் குறிப்பிட்டு எனது எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

4. நிதிநிறுவனத்தில் என்னிடம் கொடுத்தது போக மீதி எத்தனை கடனுறுதிச்சீட்டுகள் மற்றும் காசோலைகள் வைத்துக்கொண்டார்கள் எனக் குறிப்பிட்டு எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களை நிதிநிறுவனத்திடமிருந்து திருப்பிக் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்போ, புகாரோ எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. வாதியை எனக்கு 6, 7 ஆண்டு காலமாக தெரியும். நிதிநிறுவனத்தில் 6, 7 ஆண்டுகாலமாக வரவு செலவு செய்த அடிப்படையில் தான் நிதிநிறுவனத்தில் வாங்கிய கடனை முடித்துவிட்டு வாதியிடம் தனிப்பட்ட முறையில் தாவாக் கடனை வாங்கியதாகச் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதிக்கோ, எனக்கோ எந்தவிதமான மனவருத்தங்களோ, விரோதமோ உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போல் கடனுறுதிச்சீட்டில் குறிப்பிட்டுள்ள தேதியில் சாட்சிகள் முன்னிலையில் கையொப்பம் செய்து கடன் வாங்கியதாகச் சொன்னால் சரியல்ல. வாதியிடம் பெற்ற கடனை மோசடி செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் பொய்யானக் காரணங்களைக் குறிப்பிட்டு எதிர்வாதம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நிதிநிறுவனத்தில் வாங்கிய கடனை தீர்த்துவிட்ட நிலையில், வாதியிடம் தனிப்பட்ட முறையில் வாங்கிய கடனை நான் திருப்பிச் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2026.03.05 17:48:15 +0530

Additional Sub Judge,
Palani.